# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:137 **தேதி**:-30.10.2016

**BSNLல் VRSகிடையாது- BSNL CMD தகவல் மற்றும் பிற செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

'எகானாமிக்ஸ் டைம்ஸ்' பத்திரிக்கை செய்தியின் அடிப்படையில், 2016-17ல் BSNLல் பணியாற்றும் 2,09,996 ஊழியர்களில் 7% ஊழியர்கள் 2017-18ல் பணி ஓய்வு பெற உள்ளனர். RTI சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு 2017 ஏப்ரல் மாத இறுதியில் 1,96,612 ஊழியர்களே இருப்பார்கள் என பதில் கொடுக்கப்பட்டுள்ளது. ஊழியர் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கோடு கொண்டு வர முன்மொழியப்பட்ட VRS திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக BSNL CMD தெரிவித்துள்ளார்.

**பெயர் மாற்றக் குழு மாற்றியமைப்பு:-** BSNLல் பணியாற்றும் RM, TM, Sr.TOA மற்றும் TTA கேடர்களுக்கான பெயர் மாற்ற்ம் முழுமை பெற்றுள்ளது. இன்னும் பல கேடர்களின் பெயற் மாற்றம் நடைபெற வேண்டி உள்ளது. 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு முடிந்த பின்னர் இந்தக் குழுவை மாற்றியமைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. அதனடிப்படையில், BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் தோழர் P.அபிமன்யு GS, தோழர் பல்பீர் சிங் President, மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோரும், NFTE சார்பாக தோழர் C.சந்தேஸ்வர் சிங் GS மற்றும் ஜார்கண்ட் மாநில செயலாளர் தோழர் மஹாவீர்சிங் ஆகியோரும் ஊழியர் தரப்பு உறுப்பினர்களாக உள்ளனர். நிர்வாகத்தின் சார்பில் GM(EST), GM(Rect), GM(SR) மற்றும் GM(Restg&WS&I) ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் கூட்டம் விரைவில் கூட்டப்பட உள்ளது.

**JTO LICE தேர்வு முடிவுகள்:-** JTO LICE தேர்வு முடிவுகள் வெளியாவது காலதாமதமாகி வருவது தொடர்பாக திருமிகு அனிமா ராய் GM(Rectt&Trg) அவர்களிடம் 28.10.2016 அன்று பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் விவாதித்தார். ஒரு சில அதிகாரிகள் விடுப்பில் சென்று விட்ட காரணத்தால் முதலில் தெரிவித்த படி தேர்வு முடிவுகள் வெளியாக வில்லை என்றும் விரைவில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு விடப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

இந்த தேர்வு எழுதியுள்ள ஒரு சில தோழர்களை ஒரு சில நபர்கள் அணுகி, அவர்கள் தேர்வில் 2 அல்லது 4 மதிப்பெண்கள் குறைவாக பெற்றுள்ளதாகவும், பணம் கொடுத்தால் அவர்கள் தேவையான தகுதி மதிப்பெண்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளனர். இது பொய்யான தகவல்கள். இதனை கார்ப்பரேட் அலுவலகத்திற்கு நமது பொது செயலாளர் கொண்டு சென்ற போது JTO LICE தேர்வு முறைகள் பாதுகாப்பானது, இது போன்ற பித்தலாட்டங்களுக்கு வாய்ப்பில்லை என்றும் கார்ப்பரேட் அலுவலகம் மிக உறுதியாக தெரிவித்துள்ளது. எனவே இது போன்ற நபர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டாம் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**சம வேலைக்கு சம ஊதியம் பெற ஒப்பந்த ஊழியர்களுக்கும் உரிமை உண்டு- உச்ச நீதி மன்றம்:-** 26.08.2016 அன்று நிரந்தர ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை பெறுவதற்கு தற்காலிக ஊழியர்களுக்கு உரிமை உண்டு என தீர்ப்பளித்துள்ளது. 'சம வேலைக்கு சம ஊதியம்' என்ற கொள்கையின் மீது வழங்கப்பட்ட தீர்ப்பில், நிரந்தரம் அல்லது தற்காலிக ஊழியர் என்றில்லாமல் அனைத்து ஊழியர்களுக்கும், இந்த விதி தெளிவான நேரடியான உரிமையை வழங்கியுள்ளது என தெரிவித்துள்ளது.

**22.02.2017 அன்று பாராளுமன்றம் நோக்கி பேரணி-BSNLCCWF முடிவு:-** 26.10.2016 அன்று புது டெல்லியில் கூடிய BSNLCCWFன் செயலக கூட்டம், பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறும் வேளையில் 22.02.2017 அன்று பாராளுமன்றம் நோக்கி பேரணி நடத்திட முடிவு செய்துள்ளது. இந்த பேரணி வெற்றி பெற ஒப்பந்த ஊழியர் சங்கத்திற்கு தேவையான உதவிகளை BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட சங்கங்கள் செய்திட வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**